பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 12 திங்கட்கிழமை 30.10.2023 அதிர்வு 91


## வடமராட்சி கிழக்கில் வீட்டில் கொள்ளை!

### நகை, பணம் அபேஸ்

யாழ்ப்பாணம், வடமாராட்சி கிழக்கு – வத்திராயன் பகுதியில் இனந்தெரியாத சிலர் வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு வீட்டில் 04

# அரச ஊழியர்களின் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவால் உயர்த்துக!

## நாடு முழுவதும் கவனவீர்ப்புப் போராட்டம்

(நமது நிருபர்கள்)

சம்பள உயர்வு கோரி நாடு முழுவதும் அரச ஊழியர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரியே நாடளாவிய ரீதியில் அரச 04



## வடக்கு - கிழக்கில் தமிழ் மீனவர்களுக்குச் சாவு மணி

# அனைவரும் விழிப்போம் இல்லாவிட்டால் அழிவோம்



## முன்னணியின் பேச்சாளர் சுகாஷ் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு - கிழக்கின் கடற்பரப்பில் தமிழ் மீனவர்களுக்குச் சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

மீனவர் விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 04

## வவுனியாவில் ஹயஸ் மோதி மின்சார சபை ஊழியர் சாவு!

(கே.வசந்தரூபன்)

வவுனியா – மன்னார் வீதியில் பிரதேச செயலகத்துக்கு முற்பகுதியில் உள்ள பாதசாரி கடவையில் ஏற்பட்ட விபத்தில் மின்சார சபை ஊழியரான குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.



நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 04

## பாலத்துக்குள் பாய்ந்த கார்

### பிரிட்டன் பிரஜை உள்ளிட்ட இருவர் மயிரிழையில் தப்பினர்

(கே.வசந்தரூபன்)

வவுனியா – ஏ 9 வீதியில் பயணித்த சொகுசு கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாந்தசோலை சந்திப் பகுதியில் உள்ள பாலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்ற நிலையில் சொகுசு காரில் பயணித்த இருவரும் 04



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி மீண்டும் நவம்பர் 20 ஆரம்பம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை 04

# வயிற்றுக்குத்தால் பாதிக்கப்பட்ட இளம் தாய் ஒருவர் உயிரிழப்பு!

வயிற்றுக்குத்தால் பாதிக்கப்பட்ட இளம் தாய் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தர்மபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த இரண்டரை வயது குழந்தையின் தாயான இந்துஜன் பானுசா (வயது 20) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த இளம் தாய் கடந்த 25ஆம் திகதி இரவு வயிற்றுக்குத்து ஏற்பட்டதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். இதையடுத்து இடம்பெற்ற பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நவம்பர் 6 வரை மழை கிடைக்கும்!

## யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் பிரதீபராஜா தெரிவிப்பு

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வடகீழ் பருவக் காற்றுக்கான முதல் சுற்று மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இன்று அதிகாலை 4 மணியளவில் தொடங்கியுள்ளது.

இந்த மழை தொடர்ச்சியாக நவம்பர் 06 ஆம் திகதிவரை அவ்வப்போது கிடைக்கும் வாய்ப்புள்ளது. இன்று பிற்பகலுக்கு பின்னரும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.



இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் வடகிழக்கு திசையில் இருந்து காற்று வீசத் தொடங்கும்.

எனவே இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மக்கள் இனி வரும் நாள்களின் எந்நேரத்திலும் மழை கிடைக்கலாம் என்ற எடுகோளைக் கருத்தில் கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளுடன் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். வல்வெட்டித்துறையில் 50 கிலோ கேரளா கஞ்சா மீட்பு!

வல்வெட்டித்துறையில் 50 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா நேற்று (29) மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை ஊறிக்காடு கடற்கரை பகுதியில் மர்ம பொதி ஒன்று இருப்பதாக இராணுவ புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நடத்தப்பட்ட சோதனையின் போது கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சா வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பொதி எவ்வாறு வந்திருக்கும் என்பது தொடர்பில் பல்வேறு கோணங்களிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.



# சுகாதாரத்துறையில் 'டிமிக்கி' விட்டால் இனிமேல் அவர்களது பதவி 'அவுட்'!

## புதிய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன அதிரடி!!

சுகாதாரத்துறையில் தரம் குறைந்த மருந்துகளை கொள்முதல் செய்தல், ஒப்பந்த நடைமுறைகளில் விதிமீறல்களில் ஈடுபடுதல் போன்றவற்றுக்குக் காரணமானவர்களைப் பதவியில் இருந்து நீக்கவுள்ளார் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அதன்படி, சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களையும் மாற்றுவதற்கு புதிய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சர் நேற்று (29) இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

முதலில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் இயக்குநர்



குழு கலைக்கப்பட்டு புதிய தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு நியமிக்கப்பட உள்ளது.

அரசமருந்துக்கூட்டுத்தாபனத்துக்கும் புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளார்.

மேலும் சில உயர் பதவிகள் மாற்றப்படவுள்ளன.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிய சுகாதார அமைச்சராக டாக்டர் ரமேஷ் பத்திரன அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் புதிய மாற்றங்களை அவர் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிருப்தியில் உள்ள நிலையில் புதிய சுகாதார அமைச்சர் புதிய மாற்றங்களை நடைமுறைப்படுத்துவது அவர்களை மேலும் அதிருப்தியடையச் செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.



# உலக வங்கியின் செயலாற்றுக் குழு கோப்பாய் ஆங்பத்திரிக்கு விஜயம்!

(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கைக்கான உலக வங்கியின் செயலாற்று முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜியர்ட் தலைமையிலான குழுவினர் இன்று திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

வட மாகாணத்தில் உலக வங்கியின் சுமார் 1400 மில்லியன் ரூபா நிதி பங்களிப்புடன் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பிரதேச வைத்தியசாலைகளின் தொழில்நுட்ப கூடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டதில் கோபாய் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகள் நிறைவடைந்த நிலையில் அதனைப் பார்வையிடும் முகமாக அவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களை கோப்பாய் வைத்தியசாலையில் வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் , வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்து சேன, வடமாகாண பதில் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் , வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், கோபாய் பிரதேச வைத்தியசாலையின் முன்னாள் பொறுப்பு அதிகாரி வைத்தியர் மகேந்திரன், கோப்பாய் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் சிவா கோணேசன் ,ஜப்பான் ஜெயிக்கா நிறுவன அதிகாரிகள், உலக வங்கியின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உலக வங்கியின் முகாமைத்துவ செயலாற்றுப் பணிப்பாளருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது.

நாளை ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள பலதரப்பு நிதி நிறுவனங்களுக்கும் இடையிலான கலந்துரையாடலில் இவர்கள் பங்கேற்கவுள்ளனர். உலக வங்கியின் உதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதும் இந்த விஜயத்தின் மற்றுமொரு நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அனைவரும்...

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:-

“வடக்கு – கிழக்கில் ஒருபுறம் கடலட் டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப் படுகின்றது.

அதேநேரம் மறுபுறத்தில் சீனா போன்ற நாடுகளிலிருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, வடக்கு – கிழக்கு கடற்றொழிலா ளர்கள் இந்த இடத்திலாவது நீங்கள் விழிப்படைய வேண்டும்.

மீன் வளமும் அருகி உங்கள் வாழ் வாதாரமும் அழிந்து கடலுணவுகளுக்கும் இறக்குமதியை நம்பியிருக்கும் நிலை மைக்கு அரச தரப்பினரும் கடற்றொழில் அமைச்சரும் திட்டமிட்டுக் காய்களை நகர்த்துகின்றார்கள். இதனால் எமது மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அனை வரும் விழிப்போம் இல்லாவிட்டால் அழி வோம்.” – என்றார்.

## அரச ஊழியர்களின்...

மற்றும் மாகாண அரச சேவை சங்கங் களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“ஆக்காதே! ஆக்காதே! கடனாளி ஆக்காதே!”, “எமது நியாயமான சம்பள உயர்வு கோரிக்கையை ஏற்றுக்கொள்!”, “அரசே, அரச ஊழியர்களின் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவால் உயர்த்து!”, “வேண்டும் வேண்டும் சம்பள உயர்வு வேண்டும்” போன்ற சுலோகங்களைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.





## பாலத்துக்குள்...

மயிரி ழையில் எந்தவித காயங்களு மின்றி உயிர்தப்பியுள்ளனர்.வவுனியாவில் இருந்து கனகராயன் குளம் நோக்கி ஏ 9 வீதியால் சென்ற சொகுசு கார் ஏ 9 வீதி சாந்தசோலை சந்தியை அடைந்த போது அதே வழியில் சென்ற கனரக வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது குறித்த சொகுசு கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தூண் ஒன்றை உடைத்துக் கொண்டு பாலத் துக்குள் பாய்ந்து விபத் துள்குள்ளானது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த சொகுசு கார் பாரம் தூக்கியின் துணையுடன் மீட்டெடுக்கப்பட்டது.

விபத்தின் போது குறித்த சொகுசு காரில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த பிரித்தானிய குடியுரிமை பெற்ற ஒருவரும், பிறிதொரு இளைஞரும் பயணித்ததுடன், அவர்கள் எந்தவித பாதிப்புக்களுமின்றி உயிர் தப்பியுள்ள னர்.





## வவுனியாவில்...

வவுனியா – மன்னார் வீதியில் வவுனியா பிரதேச செய லகத்துக்கு முன்னால் உள்ள பாதைசாரி கடவைப் பகுதியில் வீதியோரமாக நடந்து சென்றவர் மீது பின்னால் வந்த ஹயஸ் ரக வாகனம் மோதி யதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் மின்சார சபையில் பணி புரியும் ஊழியர் ஒருவர் குருமன்காடு கலைமகள் மைதானத்துக்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து தனது பணி நிமித்தம் முல்லைத்தீவு செல்வதற்காக பஸ் நிலையம் நோக்கி நடந்து சென்றபாதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வவுனியா – மன்னார் வீதி கலைமகள் மைதானத்தருகில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய நௌபர் என்பவர் படுகாயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

ஹயஸ் ரக வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசார ணைகளை வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## கொக்குத்தொடுவாய்...

இன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் எடுத்துக்கொள் ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே சட்டத்தரணி நிறஞ்சன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்று அகழ்வுப் பணி மீண்டும் ஆரம் பிக்கப்பட இருந்த நிலையில், அகழ்வுப் பணியை ஏற்கனவே முன்னெடுத்த பேராசிரியர் ராஜ் சோமதேவ சமுகமளிக்க முடியாததால் அகழ்வுப் பணி மீளவும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக் கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவுத் தொகை பணம் எவ்வளவு என் பது தொடர்பாகப் பேசப்பட்டு அதற்கான கணக்கறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

காணாமல்போனவர்கள் சார்பில் நாங்கள் தோன்றி அதன் கட்டுக்காவல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் நீதி மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம்.

ராஜ் சோமதேவவால் குறித்த பகுதியில் 50 மீற்றருக்குள் வேறு மனித எச்சங்கள் இருப்பது சம்பந்தமாகக் கண்டுபிடிக்கக் கூடிய ராடர் கருவி ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பான முழுமையான விப ரங்களை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக் கும்படி மன்றால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் அதற்கான ஒன்று கூடல் கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழி அகழ்வு இடத்தில் மேற்கொள்ளப்பட்டு அகழ்வுப் பணி இடம்பெறவுள்ளது.

நீதிமன்றத்தில் இன்று இடம்பெற்ற வழக்கின் போது சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து கணக்காளர் ஆகி யோரும் பிரசன்னமாகி இருந்தனர்.” – என்றார்.

## வடமராட்சி...

இருந்த தங்க நகைகள் மற்றும் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 9:45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கே.டி.எச். ரக ஹயஸ் வாகனத்தில் சென்றவர்களால் இந்தக் கொள்ளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையில் பணியாற்றி வரும் ஈஸ்வரன் என்பவரது வீட்டுக்குள் புகுந்த அந்தக் கொள்ளை யர்கள், “உங்களுடைய அடையாள ஆவ ணங்களைக் காண்பியுங்கள்” என்று தெரிவித்து அவற்றைப் பார்வையிட் டுள்ளனர்.

அதன்பின்னர் வீட்டில் இருந்த 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் ஆறரைப் பவுண் தங்க நகைகள் என்பவற்றை அந்தக் கும்பல் எடுத்துச் சென்றது.

அத்துடன் அந்தக் கும்பல் வீட்டில் இருந்தவர்களின் கைத்தொலை பேசிகளையும் பறித்துச் சென்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங் கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் இலங்கைக்கு இன்று விஜயம்!

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து ஆராய்வதற்காக நால்வர் அடங்கிய ஐரோப்பிய ஒன்றிய குழு இலங்கைக்கு இன்று (30) விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை காலம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், அதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீண்டும் விண்ணப்பித்துள்ளன. இந்த நிலையில் முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவா என்று பரிசீலிக்கப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்படும் என




மங்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைக்க வேண்டும் என்று பிரதான நிபந்தனையாக முன்வைக்கப்பட்டது.

இருப்பினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் அச்சட்டமூலங்களின் உள்ளடக்கத்துக்குக் கடுமையான எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் பின்லாந்து, போலந்து, ஜேர்மனி மற்றும் லிதுவேனியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றக் குழுவினர் நாட்டுக்கு வருகைதரவுள்ளனர்.

சுமார் ஒருவார காலம் நாட்டில் தங்கியிருக்கவுள்ளனர். அந்தக் காலப் பகுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப் பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கற்பிட்டிக் கடலில் படகு ஒன்றில் தடைசெய்யப்பட்ட களைகொல்லி!

## இருவர் சந்தேகத்தில் கைது!!

கற்பிட்டி கடற்பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இயந்திர படகு ஒன்றிலிருந்து தடைசெய்யப்பட்ட களைகொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் என்பன நேற்று (29) மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேகத்தின் பெயரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி விஜய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடற்படை மற்றும் விசேட படகுப் பிரிவைச் சேர்ந்த கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 43 மற்றும் 46 வயதுடைய இரண்டு மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட களைகொல்லிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் என்பன 22 உரைப் பைகளில் அடைத்து கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் அது சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் களைகொல்லிகள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக மீன்பிடிக் கப்பலொன்றில் கொண்டு வரப்பட்டுள்ளன என்று சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனக் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட களைகொல்லிகள் மற்றும் அதனை கொண்டு வருவதற்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரப் படகு என்பவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# காணாமல் போன மீனவர் இன்று சடலமாக மீட்பு!

(ரஸீன் ரஸ்மின்)

தொடுவா கடற்பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி காணாமல் போன மீனவரின் சடலம் அம்பகதவில கரையோரத்தில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம் – மஹவெவ , மட்டகொட்டுவ பகுதியைச் சேர்ந்த ஜோசப் அலோசியஸ் (வயது – 65) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று (29) காலை மீன்பிடித் தொழிலுக்காக மீனவர்கள் இருவர் கடலுக்குச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கடலுக்குள் சென்ற மீனவர்கள் இருவரும் பயணித்த மீன்பிடி இயந்திர படகு திடீரெனக் கவிழ்ந்ததில் இருவரும் கடலில் விழுந்து காணாமல் போயிருந்தனர்.

இதனையடுத்து, அங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மற்றுமொரு இயந்திரப் படகில் இருந்தவர்கள் கடலில் வீழ்ந்து காணாமல் போன மீனவர்கள் இருவரில் ஒருவரை மீட்டுள்ளனர்.

மற்றைய மீனவர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் போன மீனவரைத் தேடும் நடவடிக்கையில் பிரதேச மீனவர்களுடன் இணைந்து கடற்படையினரும், பொலிஸாரும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் காணாமல் போன மீனவரின் சடலம் இன்று (30) அம்பகதவில பகுதியில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யுத்தக் குற்றமும் சந்தேகமும்!

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் இங்கு சில அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் தொடர்பில் எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் கண்டு கொதித்தெழுந்திருக்கின்றார் கடற்படையின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரியும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருக்கு இந்நாடுகள் சில விதித்திருக்கும் பயணத்தடை தொடர்பில்தான் இந்தச் சீற்றம்.

நாடாளுமன்றக் கண்காணிப்புக்குழு ஒன்றின் தலைவர் என்ற முறையில் ஐ.நா. முகவர் அமைப்பின் ஏற்பாட்டில் அமெரிக்கச் சுற்றுலா செல்ல முயன்ற சரத் வீரசேகரவுக்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்தமையை அடுத்துத்தான் அவருக்கு இந்தக் கொதிப்பு எகிறியிருக்கின்றது.

இந்த விடயத்தை அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த இராணுவ மற்றும் அரசியல் தலைமைகளுக்கு எதிராக வேண்டுமென்றே அவர்களை அகௌரவப்படுத்தும் இந்த நடவடிக்கையை இந்த நாடுகள் செய்கின்றன என்றும் -

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இவர்கள் எவருக்கும் எதிராக யுத்தக் குற்றம் ஏதும் எந்த நீதிமன்றத்திலும் சுமத்தப்படவே இல்லை என்றும் -

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகப் பயன்படுத்தி இந்தப் பயணத்தடை நடவடிக்கையை மேற்படி நாடுகள் மேற்கொள்கின்றன என்றும் - அவர் குறிப்பிட்டு இருக்கின்றார்.

இந்த விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கும் சரத் வீரசேகர எம்.பி., முக்கிய இரண்டு விவகாரங்களை தனது கவனத்தில் கொள்வது நல்லது.

ஒன்று - இலங்கையின் யுத்த கால நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையாளர்களும் சம்பந்தப்பட்ட கலப்பு செயன்முறை ஒன்றின் கீழ், சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணைகளை மேற்கொள்ள இணங்கும் தீர்மானம் ஒன்றை ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றுவதற்கு இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்து வழிகாட்டிய நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது.

அடுத்தது - சரத் வீரசேகர குறிப்பிடும் நபர்கள், பிரமுகர்கள் மீது உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எந்த நீதிமன்றத்திலும் மேற்படி விடயங்களை ஒட்டி யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லையாயினும், அவை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தாராளமாக இடம் பெற்றன என்பது ஐயத்துக்கு அப்பாற்பட்டது என்று அந்நாடுகள் நம்புகின்றன. அவை தொடர்பில் இலங்கை நீதி, நியாயமான விசாரணை நடத்த இணங்கிம் வரை யுத்தத்தை நடத்திய பிரதான சூத்திரதாரிகளை அந்த நாடுகள் யுத்தக் குற்றச் சந்தேகநபர்களாகவே கருதும்.

இது சரத் வீரசேகரவுக்குப் புரிந்தால் சரி.



## யானையால் பாதிக்கப்பட்ட 6 பயனாளிகளுக்கு உதவி

(அஸ்ஹர் ஆதம்)

காரைதீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காரைதீவு -12 , மாவடிப்பள்ளி - கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடந்த மார்ச் மாதம் யானையின் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்களுக்காக 6 பயனாளிகளுக்கு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் மற்றும் கணக்காளர் ஏ.எல்.எப் .றிம்ஸியா ஆகியோர் காசோலைகளை வழங்கினர்.

## இறைச்சிக்காக விற்கப்பட்ட நோயுற்ற கறவை பசுக்கள்!

(மஸ்கெலியா நிருபர்)

அக்கரபத்தனை டயகம பகுதியில் உள்ள தேசிய பால் பண்ணையில் இருந்து 450 கறவை பசுக்கள் அவ்வப்போது நோயுற்ற நிலையில் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று பண்ணையில் பணி புரியும் தொழிலாளர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

2010 ஆண்டு தேசிய மிருக வளர்ப்பு அரச நிறுவனம் மூலம் நாட்டின் பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் ஆஸ்ரேலியாவில் இருந்து பெரும் தொகையான நிதி செலவு செய்து பசுக்கள் இந்தப் பண்ணைக்குக் கொண்டுவரப்பட்டன.

அவ்வாறு கொண்டு வரப்பட்ட கறவைப் பசுக்கள் தற்போது பண்ணையில் இல்லை என்று அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

பண்ணையில் பணி புரியும் உயர் அதிகாரியால் இவ்வாறான கறவைப் பசுக்கள் இறைச்சிக்காக நுவரெலியா, கம்பளை, நாவலப்பிட்டி, ஹட்டன், அக்கரபத்தனை, பகுதியில் உள்ள இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான பசுக்கள் பண்ணையில் இருந்து பார ஊர்தி மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பால் பண்ணையில் 53 தொழிலாளர்கள் உள்ளனர்.

தேசிய பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தேவையான சகல வசதிகளும் கொண்ட பண்ணையாக அக்கரபத்தனை டயகம பண்ணை உள்ளது என்றும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களது குற்றச்சாட்டு சம்பந்தமாக பண்ணை அதிகாரி சுஜி பெர்னாந்துவிடம் வினவிய போது, தொழிலாளர்கள் முன் வைக்கும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு தொலைபேசி மூலம் பதில் சொல்ல முடியாது. பண்ணைக்கு வந்தால் இங்குள்ள உயர் அதிகாரிகள் தகுந்த முறையில் விளக்கம் தருவார்கள் என்று கூறினார்.





# 3 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பெறுமதியில் சந்நிதியான் ஆச்சிரமம் முல்லையில் உதவி!

சந்நிதியான் ஆச்சிரமம் முல்லைத் தீவு பகுதிகளுக்கு 3 லட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியில் பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

இந்த உதவித் திட்டத்தில் நிவாரணம் மற்றும் சைக்கிள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு – நெடுங்கேணி, மாமடுச்சந்தி கற்பகா அறநெறிப் பாடசாலையை சேர்ந்த 21 மாணவர்களின் குடும்பங்களை தெரிவு செய்து 2 ஆம் கட்டமாக 73 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

4 அறநெறி ஆசிரியர்களுக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான சேலைகளும், மாணவர்களுக்கு நவம்பர் மாத சத்துணவுக்கென 20 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியில் 4 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

முள்ளியவளை, முதலாம் வட்டாரத்தை சேர்ந்த கலைமகள் வித்தியால யத்தில் தரம் 07 இல் கல்வி கற்கும் தாய், தந்தையை இழந்த மாணவிக்கு சைக்கிள் மற்றும் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

கரடிப்பிலவு கிராமத்தை சேர்ந்த தண்டுவான் மகா வித்தியாலயத்தில் தரம் 08 இல் கல்வி கற்கும் மாணவி, கரடிப்பிலவு கிராமத்தை சேர்ந்த தண்டுவான் மகா வித்தியாலயத்தில் தரம் 07 இல் கல்வி கற்கும் மாணவி, கரடிப்பிலவை சேர்ந்த ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஆகியோருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

கரடிப்பிலவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நவம்பர் மாத சத்துணவுக்கு 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.


முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பில் உள்ள செங்கதிர் முன்பள்ளி ஆசிரியருக்கு 10 ஆயிரம் ரூபா வேதனம் வழங்கப்பட்டது. அத்துடன் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டங்களைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் சென்று நேரடியாக வழங்கினார்.










# கழிவுகள் நிறைந்து காணப்படும் பரு. - வல்வெட்டி கரையோரப் பகுதி

## சுகாதாரம் பேண அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்

பருத்தித்துறை முதல் வல்வெட்டித் துறை வரையான கடலோரப் பகுதிகளில் அதிகளவில் கழிவுகள் கடற்கரையோரம் அழகிழந்து துர்நாற்றம் வீசும் நிலையில் காணப்படுகிறது என்று சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக கடற்கரையோரங்கள் அழுக்குகளை கொட்டும் போது இயற்கையான முறையில் அவை அலைகள் மூலம் அகற்றப்பட்டுக் கடற்கரை சுத்தமாகக் காணப்படும்.

மணற்பாங்கான தரைகளில் இது சாத்தியமாகும். பருத்தித்துறை முதல் வல்வெட்டித்துறை வரையான கடலோரப் பகுதிகளில் சுண்ணம்புக் கற்பாறைகள் நிறைந்திருக்கின்றன. கழிவுகளை இவை இயல்பாக அகற்றவிடாது.

வல்வெட்டித்துறை கடற்கரை வீதியில் கடலோரமாக உள்ள வீடுகளின் கழிவு நீரைக் கொண்டு செல்லும் வடிகால் அதனை கடல் நீருடன் கலக்கும்படி கட்டமைக்கப்பட்டுள்ளது.

இதனால் கரையோர கடல் நீர் அழுக்கு நிறத்தில் காணப்படுகிறது.

அந்தக் கரையையே மீனவர்கள் இறங்கு துறையாகவும் பயன்படுத்துகின்றனர்.

வீதிக்கும் கடற்கரைக்கும் இடையில் பல இடங்களில் கழிவுகளை கொட்டுவது நீண்ட நாள்களாக தொடர்ந்து இடம்பெறுகின்றன.

கரையோர வீடுகளில் வசிப்போரும் தங்கள் வீட்டுக் கழிவுகளைக் கடற்கரையில் கொட்டிவிடுவதை இயல்பான வழமையாக கொண்டுள்ளனர்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகள் மூலம் மக்களுக்கு அறுவுறுத்திய போதும் மக்களிடையே ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் குறைவாக உள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர்.

கடற்கரையோரத்தில் உள்ள பொலித்தீன், பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கழிவுகளை அகற்றி சுத்தம் செய்யும் செற்றிட்டங்களை மேற்கொண்ட போதும் தொடர்ந்து அப்பகுதிகள் சுத்தமாக பேணப்படுவதற்கு பொதுமக்கள் கரிசனை காட்டினால் மட்டுமே சாத்தியமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

துறைசார் வல்லுநர்கள் மற்றும் பொறுப்பானவர்களின் முயற்சியால் யாழ் . மாவட்டத்துக்கென தனியானதொரு கழிவு முகாமைத்துவத் துறை உருவாக்கப்பட்டாலே இத்தகைய சூழலை இல்லாதொழிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வாசிப்பு வாரத்தில் கௌரவிப்பு!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு கவிஞர் சோலைக்கிளி அதீக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



வாசிப்பு வார நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவர் உரையாற்றியதை அடுத்துக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் இ.பி.எஸ்.ஐ. இணைப்பாளர் ஏ.றாசிக், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

+94 703 563213 +94 21 222 8358
www.jride.lk
JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

# கூடிக்கலையும் கூட்டங்கள் மட்டக்களப்பில் வேண்டாம்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடிக்கலையும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்த வேண்டாம் என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியதேத்திரன் தெரிவித்துள்ளார்.

மயிலத்தமடு மேச்சல் தரையில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களை அத்துமீறி குடியேற்றும் செயல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து கூறுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தியில் முன்னணி வகிப்பது நெற்செய்கை, கால் நடைவளர்ப்பு, மீன்பிடி. இதில் தற்போது கால் நடைகள் மேயும் தரை (மயிலத்தமடு) சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ளதை தடுக்காவிட்டால் கால்நடைகளின் பால் உற்பத்தியும், நெற்செய்கையும் பாதிப்படைந்து பொருளாதார வீழ்ச்சியை எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் எதிர்நோக்கும்.



தற்போது சிந்தாண்டியில் பண்ணையாளர்கள் தொடர் போராட்டத்தை இரண்டு மாதங்கள் எட்டும் நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கின்றனர்.

ஜனாதிபதி ரணிலின் வாக்குறுதி, அமைச்சர்களின் வாக்குறுதி, இராஜாங்க அமைச்சர்களுடைய வழங்கா நிலை, அதிகாரிகளின் மௌனம் எல்லாம் மேச்சல் தரைக்கான தீர்வைப் பெற்றுத் தரவில்லை.

இவ்வாறான நிலை இருக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திக் குழு கூட்டங்களை நடத்துவது தேவையற்ற விடயம். முதலில் மேச்சல் தரைக்கான நிரந்தர தீர்வு கிடைக்காமல் பிரதேச, மாவட்ட கூடிக்கலையும் அபிவிருத்திக் கூட்டங்களை தவிர்பது நல்லது.

ஏன் அபிவிருத்திக் குழு கூட்டங்கள் நடத்தவில்லை என்ற செய்தியை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தனும், மாவட்ட அரச அதிபரும் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும்.–என்றார்.

# தபால் ரயிலுடன் மோதி உயிரிழந்தது யானை!

(அப்துல்சலாம் யாசீம் )

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த தபால் ரயிலுடன் இரண்டு யானைகள் மோதியதில் ஒரு யானை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (28) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கிதுல்உதுவ 154 ஆம் கட்டைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யானை மின்வேலிகள் சிறந்த முறையில் இல்லாமையால் யானைகள் அதிகளவில் விபத்துக்குள்ளாகி வருகின்றன என்று அப்பகுதியிலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.



வழமையாக இந்தப் பகுதியில் ரயிலுடன் மோதி யானைகள் உயிரிழக்கின்றன என்று வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தும் இந்த விடயத்தில் எதுவித கவனமும் செலுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

இனிவரும் காலங்களிலாவது யானைகளைப் பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.







# பொகவந்தலாவ சென். மேரிஸ் வித்தியாலயத்தின் கலைவிழா

(பொகவந்தலாவ நிருபர்)

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ சென். மேரிஸ் கனிஷ்ட வித்தியாலயத்தின் கலைவிழா நிகழ்வு கல்லூரியின் அதிபர் எம் ராஜநாயகம் தலைமையில் பொகவந்தலாவ ஸ்ரீ தண்டாயுதபாணி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது

இதன் போது சென். மேரிஸ் கனிஷ்ட வித்தியாலயத்தில் இருந்து தப்பிசை, கோலாட்டம், கும்மி மற்றும் பல்வேறுபட்ட கலாச்சார அம்சங்களோடு பொகவந்தலாவ பிரதேச பாடசாலைகளின் பணியாற்றுகின்ற அதிபர்கள் அதிதிகளாக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.



அதனை தொடர்ந்து மண்டபத்தில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பொகவந்தலாவ பிரதேசத்தில் ஓய்வு பெற இருக்கின்ற சென். மேரிஸ் தேசிய கல்லூரியின் அதிபர் ஏ. வேலுசாமி ஹோலிரோசரி, தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் பி . குமரேசன், பெற்றசோ தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.பி எஸ். விக்டர், எல்பட தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் கெம்பியன் தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபருமான கோடிஸ்வரன் உள்ளிட்டோருக்கு மாலை அணிவித்து பொன்னாடை போத்தி நினைவு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# விளையாட்டு உபகரணம் வழங்கல்

(எம்.எப்.நவாஸ்)

அல் – அறபா விளையாட்டுக் கழகத்தால் உதைப்பந்தாட்ட வீரர்களுக்கான உபகரணம் வழங்கப்பட்டுள்ளன.

பாலமுனை உதைபந்தாட்ட இளம் வீரர்களின் திறமையினை வளர்க்கும் முகமாகவும் கால்பந்தாட்டத் துறையை ஊக்குவிக்கும் முகமாகவும் முதற்கட்டமாக அவர்களின் பயிற்சிக்கு தேவையாக இருந்த ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.





# உயரமான பாலமுருகன் சிலைக்கு கிழக்கில் நேற்று திருக்குடமுழுக்கு!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கிலங்கையில் உயரமான பாலமுருகன் சிலைக்கு நேற்று சுபமுகுர்த்த வேளையில் திருக்குட முழுக்கு விழா இடம்பெற்றது.

கிழக்கிலங்கையின் பிரிசித்தி பெற்ற தொன்மை வாய்ந்த முருகன் ஆலயங்களில் சிறப்பிடம் பெறும் தாந்தாமலை முருகன் ஆலயத்தை பிரதிபலிக்கு முகமாக நிர்மாணிக்கப்பட்ட கிழக்கிலங்கையின் உயரமான பால முருகன் சிலைக்கே திருக்குடமுழுக்கு நடத்தப்பட்டது.

தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சுதானந்த குருக்கள் தலைமையில் திருக்குட முழுக்கு இடம்பெற்றது. இதன்போது ஆலய நிர்மாண பணிக்காக கிடைக்கப் பெற்ற நிதியில் இருந்து வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் வழங்கப்பப்டது.





# திட்ட வீடு பயனாளிகளிடம் கையளிப்பு!



(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கைதடி தச்சன்தோப்பு கிராமத்தில் திட்ட வீடு ஒன்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த காலத்தில் பிரதேசத்துக்கு ஓர் வீடு என்ற திட்டத்தின் கீழ், அப்போதைய மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்கஜனின் சிபாரிசு மூலம் வழங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வீடே இவ்வாறு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



# வவுனியா தபால் நிலைய ஊழியர்கள் போராட்டம்

(வவுனியா நிருபர்)

வவுனியா தபால் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அரசுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதான தபால் நிலையம் முன்பாக அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று மதியம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரியும், அரசின் செயற்பாட்டைக் கண்டித்தும் நாடு பூராகவும் இடம்பெறும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "20 ஆயிரம் ரூபாய் சமப்பள அதிகரிப்பை வழங்கு", "வாழ்க்கைச் செலவைக் குறைத்திடு", "மக்களுக்கு நிவாரணம் வழங்கு", "மின்சாரக் கட்டணத்தைக் குறைத்திடு" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதில் தபால் நிலைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# மன்னாரில் திறந்து வைக்கப்பட்ட கடல்சார் குற்றப்புலனாய்வு பிரிவு!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடல் பகுதிகளை மையமாக வைத்து மேற்கொள்ளப்படும் ஆள்கடத்தல், மனித வியாபரம் மற்றும் கடல்சார் குற்றங்களை கட்டுபடுத்துவதற்காக மன்னார் மாவட்டத்தில் நிறுவப்பட்ட கடல்சார் குற்றப்புலனாய்வு பிரிவு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.


ஆஸ்திரேலிய பொலிஸாரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் கோந்தைபிட்டி பகுதியில் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அலுவலகம் அமைக்கப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆஸ்திரேலியாவின் பொலிஸ் அதிகாரி ரொபேர்ட் வின்சன், குற்றப் புலனாய்வுப் பிரிவு டி.ஐ.ஜீ. பிரசாத் ரணசிங்க, வன்னி பிராந்திய டி.ஐ.ஜி. விஜயசேகர, ஆள்கடத்தல், மனித வியாபாரம் மற்றும் கடல்சார் குற்றத்தடுப்பு பிரிவு பணிப்பாளர், தடுப்பு பிரிவு பணிப்பாளர் , மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபால, ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மன்னார் மாவட்டத்தை மையப்படுத்தி இடம் பெறும் ஆட்கடத்தல் மற்றும் மனித வியாபாரம் உட்பட பல்வேறு கடல்சார் பிரச்சினைகள் தொடர்பில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவ சங்கங்களின் பிரதி நிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது.

இறுதியில் விருந்தினர்களால் மன்னார் மாவட்ட விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வின் நினைவாக மரக்கன்றுகளும் நட்டுவைக்கப்பட்டன.







# முல்லைத்தீவு செயலகத்தில் புத்தகக் கண்காட்சி நிகழ்வு!

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புத்தக் கண்காட்சி நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் செயலகத்தில் இடம் பெற்றது.

இப் புத்தகக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து புத்தகங்களை பார்வையிட்டனர். விற்பனைக்காக வைக்கப்பட்ட புத்தகங்களையும் வாங்கிச் சென்றனர். புத்தகக் கண்காட்சியில் பங்குபற்றிய 50 பாடசாலைகளது நூலகங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரச அதிபர் க. கனகேஸ்வரன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்டச் செயலாளர், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.













# “நாங்கள் வந்தேறிகள் அல்லர் இம்மண்ணின் மைந்தர்களே”

## யாழில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட நினைவு நாள் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

“நாங்கள் வந்தேறிகள் அல்ல இந்த மண்ணின் மைந்தர்களே!” எனக் குறிப்பிட்டு வடக்கிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்ட முஸ்லிம்களின் 33 ஆம் ஆண்டு நினைவுநாள் முஸ்லிம் மக்களால் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இங்கிருந்து தாம் வெளியேற்றப்பட்ட 33 ஆம் ஆண்டை நினைவுகூரும் வகையில் முஸ்லிம் மக்கள் அதிகம் வாழுகின்ற யாழ். நகரை அண்மித்த ஐந்து சந்திப் பகுதிகள் முழுவதும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு தமது எதிர்ப்பை அவர்கள் இன்று வெளிப்படுத்தினர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ். பெரிய மொகதீன் ஜிம்மா பள்ளிவாசலில் இதனை நினைவு கூரும் நிகழ்வும், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பும் நடைபெற்றன.

இதன்போது பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இந்த நாளை நினைவு படுத்தும் வகையில் தென்னை மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

மேலும், இந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டு தாம் மீளவும் வந்திருக்கின்ற நிலைமையில் தம்மை எவரும் கண்டு கொள்வதில்லை எனக் கவலை தெரிவித்த முஸ்லிம் மக்கள், சகல வசதிகளையும், உரிமைகளையும் பெற்று தாமும் சுதந்திரமாக வாழுகின்ற நிலைமையை ஏற்படுத்த அனைவரினதும் உதவிகள் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.







# தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்:

# மோடியின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம்!

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் பிரதமர் மோடியின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முத்துராமலிங்கத் தேவரின் 116 ஆவது ஜெயந்தியை ஒட்டி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் இன்று நடைபெற்ற அரசு விழாவில், முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு தேவர் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் தொடர்கதையாகி வருகிறது. இது தொடர்பாக பலமுறை வெளியுறவு அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளோம். பிரதமர் மோடியின் கவனத்துக்கும் இதனைக் கொண்டு சென்றுள்ளோம்.

இப்போது, டி.ஆர்.பாலு எம்.பியை டில்லி அனுப்பியுள்ளோம், தமிழக மீனவர்கள் விவகாரம் குறித்து அவர் வெளியுறவு அமச்சரை சந்தித்துப் பேசவுள்ளார். இலங்கைக் கடற்படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து அவர் வலியுறுத்துவார் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அவர்களையும் அவர்களது 5 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். இவ்வாறான தொடர்ச்சியான கைதுகள் மீனவ சமூகத்தினரிடையே மிகுந்த மன உளைச்சலையும், வேதனையையும் ஏற்படுத்துகின்றது.

தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது கோரிக்கைகள் ஏற்கப்படாமல் போகிறது என உணர்கிறார்கள். நம் மீனவர்களின் உரிமைகளுக்காக மத்திய அரசு மேலும் வலுவாகக் குரல் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் பேச்சு வார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.

பாக்குநீரிணை பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் தமிழ்நாட்டைச் சேர்ந்த 64 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 10 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற தொடர்ந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப் படுகின்றனர். இதனை வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறோம். எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக உரிய நிலையான தூதரக வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆந்திர ரயில் விபத்து: உயிரிழப்பு 13 ஆக அதிகரிப்பு

ஆந்திராவில் பயணிகள் ரயில் மீது கடுகதி ரயில் மோதியதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் முதல்கட்ட தகவலின்படி இந்த விபத்துக்கு மனித தவறு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

விசாகப்பட்டினம் – ராயகடா ரயில் சிவப்பு சமிக்ஞையை கவனிக் காமல் மீறிச் சென்றதால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது.

ரயில் விபத்தை அடுத்து அந்த மார்க்கத்தில் செல்லும் 15 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 22 ரயில்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்படுகின்றன.



ஆந்திர மாநிலம் விஜயநகரம் மாவட்டம் கண்டகப்பள்ளியில் பயணிகள் ரயில் மீது கடுகதி ரயில் மோதி நேற்று விபத்துக்குள்ளானது.

# ஹமாஸ் அமைப்பின் ரகசிய சுரங்க நகரம்: 260 அடி ஆழத்தில் 500 கி.மீ. நீள்கிறது

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கிலோ மீற்றர் தொலைவுக்கு ரகசிய சுரங்க நகரத்தை அமைத்துள்ளனர்.

இந்த சுரங்க நகரத்தில் பதுங்கியிருந்து இஸ்ரேல் இராணுவத்துக்கு எதிராக அவர்கள் போரிட்டு வருகின்றனர்.

இஸ்ரேலின் வான் வழி தாக்குதலில் காசா பகுதியில் சுமார் 40 சதவீத கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன. காசாவுக்கான குடிநீர், உணவு பொருட்கள், மின்சாரம், எரிபொருள் விநியோகம் முழுமையாக துண்டிக்கப்பட்டு உள்ளன.

ஆனாலும் ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்து போரிட்டு வருகின்றனர். ஹமாஸின் போர் வியூக பின்னணியில் அவர்களின் ரகசிய சுரங்க நகரம் இருப்பது தெரியவந் துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதி 41 கிலோ மீற்றர் நீளம், 12 கிலோ மீற்றர் அகலம் கொண்டதாகும். இதன் தென்மேற்கில் 11 கிலோ மீற்றர் தொலைவு எல்லையை எகிப்து உடனும் கிழக்கு, மேற்கில் 51 கிலோ மீற்றர் தொவு எல்லையை இஸ்ரேல் உடனும் பகிர்ந்து கொண்டுள்ளது.

கடந்த 1948 முதல் 1967 வரை காசா பகுதி எகிப்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த 1967 இல் இடம்பெற்ற போரில் எகிப்திடம் இருந்து காசா பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. இதன்பிறகு எகிப்து, காசா எல்லைப் பகுதியில் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது.

அப்போது எகிப்தில் உள்ள தங்களது உறவினர்களை சந்திக்க காசா பகுதி மக்கள் எகிப்துக்கு ரகசியமாக சுரங்கப் பாதை அமைத்தனர். கடந்த 1994 ஆம் ஆண்டில் இந்த சுரங்கப் பாதை வழியாக பாலஸ்தீன தீவிரவாதிகள் ஆயுதங்களை கடத்த தொடங்கினர்.

இதை தடுக்க அமெரிக்காவின்



உதவியுடன் எகிப்து அரசு கடந்த 2009 ஆம் ஆண்டில் காசா எல்லையில் 16 அடி ஆழத்தில் அஸ்திவாரம் அமைத்து, 20 அடி உயரத்துக்கு இரும்பிலான சுவரை கட்டியது. இந்த இரும்பு சுவருக்கும் கீழாக காசாவில் இருந்து எகிப்துக்கு ரகசிய சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டன.

இந்த பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து ஆயுதங்கள், எரிபொருள், உணவு பொருட்கள், மருந்துகள், கட்டுமான பொருட்கள் காசாவுக்கு கொண்டு வரப்பட்டன.

கடந்த 2005 ஆம் ஆண்டில் காசாவில் இருந்து இஸ்ரேல் இராணுவம் முழுமையாக வெளியேறியது. அதன் பிறகு ஹமாஸ் அமைப்பினர், காசா பகுதியில் பிரம்மாண்ட சுரங்க நகரத்தை நிர்மாணிக்கும் பணியை தொடங்கினர். நாள்தோறும் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கான கட்டுமான செலவை ஈரானும், அடிப்படைவாத முஸ்லிம் அமைப்புகளும் ஏற்றுக் கொண்டன. சமீபத்திய புள்ளிவிவரத்தின்படி ஹமாஸ் தீவிரவாதிகள் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கிலோ மீற்றர் தொலைவு நீளத்துக்கு சுரங்கப் பாதையை அமைத்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க, இஸ்ரேலிய உளவுத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

காசா பகுதியின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன. இதில் பல்வேறு சுரங்க பாதைகள் எகிப்து வரை நீள்கின்றன. இதை சுரங்கப் பாதை என்று கூறுவதைவிட சுரங்க நகரம் என்று அழைக்கலாம். சுரங்கப் பாதைக்குள் பிரம்மாண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில்தான் இஸ்ரேலிய பிணைக் கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர்.

ஹமாஸ் அமைப்பினரின் ஆயுத கிடங்குகளும் சுரங்கப் பாதையில் உள்ளன. அவற்றில் ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலான சுரங்கப் பாதைகள் சிலந்தி வலை பின்னல் போல கட்டப்பட்டு உள்ளன. இந்த பாதைகள் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது என்பது ஹமாஸ் அமைப்பினருக்கு மட்டுமே தெரியும்.

வீடுகள், மசூதிகளில் சுரங்கப் பாதைகளின் நுழைவு வாயில்கள் உள்ளன. ஹமாஸ் தீவிரவாதிகளின் தலைமைஅலுவலகமும் சுரங்க நகரத்தில் செயல்படுகிறது. சிறிய மருத்துவமனை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஜெனரேட்டர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சுரங்க நகரத்தில் இருக்கின்றன.

இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையால் காசா பகுதிக்கான அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் முழுமையாக தடைபட்டிருக்கிறது. ஆனால் ரகசிய சுரங்கப் பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து காசாவுக்கு குடிநீர், உணவு, எரிபொருள், ஆயுதங்கள் உள்ளிட்டவை தொடர்ந்து கடத்தி வரப்படுகின்றன. இதன் காரணமாகவே ஹமாஸ் அபைப்பினரால் தொடர்ந்து போரில் ஈடுபட முடிகிறது என்று தெரிவித்துள்ளன.

# மெக்சிகோவில் ‘ஓடிஸ்’ சூறாவளி: 48 பேர் பலி, 36 பேரை காணவில்லை

வடஅமெரிக்க நாடான மெக்சிகோவை தாக்கிய ‘ஓடிஸ்’ சூறாவளியில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது. மேலும் சுமார் 36 பேரை காணவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

மெக்சிகோவின் பசிபிக் கடற்கரையில் ‘ஓடிஸ்’ சூறாவளி சில தினங்களுக்கு முன்பு கரையைக் கடந்தது. அப்போது ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் மழை ஆகியவற்றால் அகாபுல்கோ பகுதிகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன.



இந்த புயலால் மக்களின் வீடுகள், வெளியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள், மின்கம்பங்கள், மரங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் என ஏராளமானவை சேதமடைந்துள்ளன. இதனால் மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் தவித்து வருகின்றனர்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பார்ப்பதற்கே மிகவும் கொடூரமாக இருக்கின்றன என அங்கிருக்கும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், ‘ஓடிஸ்’ சூறாவளியில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்திருக்கிறது. மேலும் சுமார் 36 பேரை காணவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.